


தேர்தல் அரசியலில் ஈடுபடுகிற விஷயத்தில், ஹமாஸுக்கு ஹிஸ்புல்லாதான் முன்னோடி. லெபனானின் ஹிஸ்புல்லா, தொடக்கம் முதலே நாடாளுமன்றத்தில் ஒரு கால், பீரங்கிகளில் ஒரு கால் என்று கொள்கைத் திட்டம் வகுத்துக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கும் இயக்கம். ஆனால், லெபனானின் அரசியல் சிக்கல்கள், இனக்குழுச் சிக்கல்கள் எதுவும் பாலஸ்தீனில் கிடையாது. மெஜாரிட்டி அங்கே சன்னி முஸ்லிம்கள். கொஞ்சம் கிறிஸ்துவர்கள் இருக்கிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஷியாக்களும் இருக்கலாம். சன்னி இயக்கமான ஹமாஸுக்குத் தான் பங்குகொண்ட முதல் தேர்தலிலேயே ஆட்சியமைக்கும் அதிகாரம் கிடைத்தது பெரிய விஷயமே இல்லை.

எப்படி ஆள்கிறார்கள், ஆளப்போகிறார்கள் என்பதுதான் விஷயம்.

2006 மார்ச் மாதம், ஹமாஸ் ஆட்சியமைக்க சௌகரியமாக, முந்தைய பாலஸ்தீன் அத்தாரிடியின் பிரதமர் அகமது குரேவும் அவரது அமைச்சர்களும் பதவியிலிருந்து விலகி வழிவிட்டார்கள். அதுநாள் வரை தளபதியாக மட்டுமே அறியப்பட்டிருந்த ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியா, பிரதமர் என்கிற பதவியில் ஏறி உட்கார்ந்தார். ஆயுதம் ஏந்தாத ஹனியா. கூட்டத்துக்குக் கையாட்டும் ஹனியா. அறிக்கை விடப்போகிற ஹனியா. ஆதரவு திரட்டப்போகிற ஹனியா.

சரி, ஜனநாயகம் என்று இறங்கியாகிவிட்டது. அதிகபட்சம் எத்தனை தூரம் மற்றவர்களை அரவணைத்துப் போகமுடியும்? ஹனியா மிகவும் வெளிப்படையாகவே இருந்தார். முந்தைய ஆளும் கட்சியான அல் ஃபத்தாவின் தலைவர் மம்மூத் அப்பாஸிடம், ஆட்சியில் பங்கெடுத்துக்கொள்ளும்படி அவர் கேட்டார். கூட்டணி அரசு அவசியமில்லைதான். நல்ல மெஜாரிட்டி இருக்கவே செய்தது. ஆனாலும் ஹனியா கேட்டார்.

ஃபத்தாவுக்கோ, பிற பாலஸ்தீன் இயக்கங்களுக்கோ இதில் ஆர்வமில்லை. எனவே, அப்பாஸ் இதற்கு மறுத்துவிட்டார். கௌரவமாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதில் தனக்குப் பிரச்னை ஏதுமில்லை என்று சொல்லிவிட்டார். எனவே, ஹமாஸ் தனித்தே ஆட்சியமைத்தது.

மம்மூத் அல் ஜவாஹர் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். ஷேக் அகமது யாசின் மறைந்து ஹமாஸின் தலைவராக ரண்டிஸி அறியப்பட்டதற்கு இடைப்பட்ட காலத்தில், ஹமாஸை வழிநடத்தியவர் என்று ஜவாஹர் குறித்த வதந்தி ஒன்று உண்டு. வதந்திதான். ஹமாஸ் இதை உறுதிப்படுத்தியதில்லை. ஆனால், தொடக்க காலத்திலிருந்தே ஹமாஸின் குரலாக இருந்தவர் அவர். எந்த அறிக்கை யார் வெளியிட்டாலும், வாசிக்கும் குரல் ஜவாஹருடையதாகத்தான் இருக்கும். ஏழெட்டுமுறை இஸ்ரேலிய ஏவுகணைத் தாக்குதலிலிருந்து தப்பித்தவர். எப்படியாவது அவரைப் பிடித்துவிட மாட்டோமா என்று மொசாட்டின் மூத்த தலைகள் அத்தனை பேரும்,

தூக்கமில்லாமல் அலைந்த இரவுகள் பல. அதே ஜவாஹர்தான் வெளியுறவுத்துறை அமைச்சராக அமர்ந்தார். இஸ்ரேல் பல்லைக் கடித்தது.

சயீது சேயம் என்பவர் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். கூடவே, நாலைந்து பாதுகாப்புப் படைப்பிரிவுகளை உருவாக்கி, அதற்கும் அவரையே பொறுப்பாக்கினார் ஹனியா. ஹமாஸ் ஒரு போராளி இயக்கமாக இருந்த காலத்தில், அதன் பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து வழிநடத்தியவர் என்கிறபடியால் இந்த ஏற்பாடு. அலா அல் தீன் அல் அராஜ் என்கிற இன்ஜினீயர் ஒருவர், ஹமாஸ் அமைச்சரவையின் திட்ட கமிஷன் அமைச்சரானார். ஓமர் அப்துல் ரசாக் நிதியமைச்சர்.

ஜனநாயக ரீதியில் செய்யவேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் பக்காவாகச் செய்து முடித்துவிட்டு, அந்த வராத வரிப்பணம் தொடர்பான தங்கள் இறுதி நிலைப்பாட்டை ஹமாஸ் அறிவித்தது. "எங்களுக்கு ஒரே ஒரு எதிரிதான். யூதர்கள். ஹமாஸ் இன்றைக்கு ஆட்சியமைத்திருக்கிறது என்பதற்காக, இந்தக் கொள்கையில் மாறுதல் ஏதுமில்லை. அவசியம் ஏற்பட்டால் மீண்டும் அவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தத் தயங்கமாட்டோம்."

பாலஸ்தீன் பாதுகாப்புப் படைகளின் தலைமை இயக்குநராகப் பதவி அமர்த்தப்பட்ட ஜமால் அபூ சம்ஹதானா, சண்டே டெலிகிராஃப் என்கிற பத்திரிகைக்கு இவ்விதமாக ஒரு பேட்டியளித்தபோது, அது இரண்டு விதமான விளைவுகளை உண்டாக்கியது.

முதலாவது, பாலஸ்தீனியர்கள் சற்று ஆசுவாசமடைந்தார்கள். நல்லவேளை, ஹமாஸ் முழுக்க மாறிவிடவில்லை. அவர்கள் ஆடுகள் ஆகிவிட்டால், இஸ்ரேல் உடனே பக்ரீத் கொண்டாடிவிடும். அந்தக் கவலைதான் அவர்களுக்குப் பிரதானம்.

இரண்டாவது விளைவு, ஹமாஸை ஆதரிக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த ரஷ்யா போன்ற சில தேசங்களுக்குக் கவலை வந்துவிட்டது. நீங்கள் ஜனநாயகச் சட்டை அணிந்துகொண்டதனால்தானே உங்களை ஆதரிக்கவும் அங்கீகரிக்கவும் நினைத்தோம்? மீண்டும் ஆயுததாரியாவோம் என்று அடம் பிடித்தால், நாங்கள் எப்படி ஆதரிப்பது?

ஹமாஸ் இதற்குப் பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை என்பதுதான் உண்மை. பாலஸ்தீனின் அரசியல் சூழ்நிலை அத்தனை சிக்கலானது. போராளி இயக்கங்களை அங்கே வளர்த்து, வாழவைப்பது பொதுமக்கள். ஒருபோதும் அவர்கள் ஆயுததாரிகளைத் தங்கள் விரோதிகளாக நினைத்ததில்லை. இஸ்ரேலின் அராஜகங்களிலிருந்து ஓரளவாவது தங்களைக் காப்பது இயக்கங்களின் தீவிரவாதச் செயல்கள்தான் என்பது அவர்களது அசைக்கமுடியாத கருத்து. கடந்தகால சரித்திரம் சுட்டிக்காட்டுவதும் இதனைத்தான்.

இத்தகைய மிகச் சிக்கல் வாய்ந்த சூழலில், அரசியல் கட்சியாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற ஒரு போராளி இயக்கம், தன் மக்களையும் உலக நாடுகளையும் ஒரு நேர்கோட்டில் அணிவகுக்க வைப்பதென்பது, உண்மையிலேயே மிகப்பெரிய சவால். ஹமாஸ் அதற்குத்தான் முயற்சி செய்கிறது. முடியுமா என்பதுதான் மிகப்பெரிய கேள்விக்குறி.

இதனிடையில், ஹமாஸுக்கும் ஃபத்தாவுக்குமான உரசல்கள், எந்தக் கணமும் பற்றிக்கொள்ளும் அபாயம் வேறு அங்கே எழுந்திருக்கிறது. கடந்த மார்ச்சிலேயே மம்மூத் அப்பாஸைக் கொல்ல ஹமாஸ் முயற்சி செய்வதாக இஸ்ரேலிய உளவுத்துறை ஒரு குண்டைத் தூக்கிப் போட்டது. இல்லை என்று ஹமாஸ் மறுத்தாலும், அல் ஃபத்தா இயக்கத்தினர் இதனைச் சும்மா விடுவதாக இல்லை. தேர்தலில் தோற்ற அதிர்ச்சி ஒருபுறம், ஹமாஸின் எழுச்சி உருவாக்கியிருக்கும் வெறுப்பு மறுபுறம். அவர்களும் சந்தர்ப்பத்துக்காகத்தான் காத்திருக்கிறார்கள். இந்தச் சகோதரச் சண்டையில் குளிர்காய வாய்ப்பிருக்கிறதா என்று தேடுவதுதான் இஸ்ரேலிய உளவுத்துறையின் இப்போதைய ஒரே பணியாக இருக்கிறது.

கடந்த ஆண்டு முழுவதும் பாலஸ்தீனில் நடந்த பல குட்டிக் கலவரங்களில் ஹமாஸும் ஃபத்தாவும் எதிரெதிர் அணியில் இருந்து வந்திருப்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அடித்துக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் இஸ்ரேலுக்குச் சாதகமாகப் போவது தவிர்க்கமுடியாதது.

ஃபத்தா ஆட்சியில் இருந்தபோது, ஹமாஸ் எப்படித் தாக்குதல்களில் ஈடுபட்டு, பாலஸ்தீன் அத்தாரிடியினரால் அதன் போராளிகள் கைது செய்யப்பட்டார்களோ, அதே பாணி. இம்முறை ஆட்சியில் ஹமாஸ். கைதானது ஃபத்தா. இது பாலஸ்தீனியர்களிடையே மிகுந்த கலக்கத்தையும் கவலையையும் உருவாக்கியிருக்கிறது. ஹமாஸும் ஃபத்தாவும் வெளிப்படையாக, தீவிரமாக அடித்துக்கொள்வது என்று தொடங்கிவிட்டால், அது இஸ்ரேலுடனான யுத்தத்தைக் காட்டிலும் வீரியம் மிக்கதாக இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

தவிரவும், அரசியல் ரீதியிலும் கொள்கை ரீதியிலும் ஹமாஸின் கோஷங்களில் கடந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் மாற்றம், பாலஸ்தீன் மக்களின் குழப்பத்தை மேலும் அதிகரித்திருக்கிறது. 'யாருடைய நிர்ப்பந்தத்துக்கும் பணியமாட்டோம், முழுப் பாலஸ்தீனையும் அடையும்வரை ஓயமாட்டோம்' என்று சொல்லிக்கொண்டிருந்தது ஹமாஸ். ஆனால், தேர்தல் வெற்றிக்குப் பிறகு இந்தக் கோஷத்தில் ஏற்பட்டதொரு மகத்தான மாறுதல், ஹமாஸின் அரசியல் நிறம் மாறுகிறதோ என்கிற சந்தேகத்தை அவர்களுக்கு உண்டாக்கியது.

தேர்தல் அறிக்கையிலிருந்தே இந்த மாறுதலைக் காணமுடியும். அதுநாள் வரை இஸ்ரேலை ஒழிப்பது என்ற கோஷத்தை முன்வைத்து வந்தவர்கள், அந்த அறிக்கையில், 'ஜெருசலேத்தைத் தலைநகராகக் கொண்ட சுதந்திர பாலஸ்தீன் தேசம்' என்று அறிவித்திருந்தார்கள். வெற்றிக்குப் பிறகு, இஸ்ரேல் மீதான தாக்குதல்கள் வெகுவாகக் குறைந்துவிட்டதும், ஃபத்தா இயக்கத்தினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதும் பாலஸ்தீனியர்கள் வயிற்றில் புளி கரைக்கப் போதுமான விஷயங்களாக இருந்தன.

அவர்கள் தயங்கவில்லை. ஹமாஸ் தலைவர்களிடம் நேரிடையாகவே கேட்டார்கள். ஏன் இந்த மாறுதல்? எதற்காக இந்தப் புதிய நிலைப்பாடு?

ஆனால், காலீத் மஷால் உறுதியாகச் சொன்னார். 'நாங்கள் மாறவில்லை. கொள்கையோ, கோஷமோ மாறவேயில்லை. அப்படி மாறியிருப்பதாக நீங்கள் நினைத்தால் அது தவறு. இஸ்ரேலை ஒழிப்பதற்காகத் தொடங்கப்பட்ட புனிதப்போர் ஓயவில்லை. இப்போது கடைப்பிடிப்பது போர் நிறுத்த நடவடிக்கை மட்டுமே. இந்தப் போர் நிறுத்த நடவடிக்கையும் ஹமாஸின் செயல்திட்டங்களுள் ஒன்றாக முதலிலேயே அறிவிக்கப்பட்டதுதான். பத்தாண்டு காலம். அதன்பின் மீண்டும் யுத்தம் தொடரும்.'

உலகில் வேறு எந்த ஓர் இயக்கமும் இப்படியொரு இசகுபிசகான நிலைப்பாட்டையும் கொள்கையையும் எடுத்ததில்லை. ஆட்சி என்பதை போர் நிறுத்த காலத்து நடவடிக்கைகளுள் ஒன்றாகவும், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு மீண்டும் போர் தொடங்கும் என்றும் அறிவித்ததில்லை.

இதன் வெளிப்படையான அர்த்தம் இதுதான்: பாலஸ்தீனில் அமைதி என்பது தாற்காலிக ஏற்பாடு மட்டுமே. யுத்தம் ஒன்றுதான் நிரந்தரமானது. இஸ்ரேலை ஒழிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை ஹமாஸ் உள்ளிட்ட அத்தனை இயக்கங்களும் அறிந்திருக்கின்றன. ஒரு தேசத்தை இல்லாமல் போகச் செய்வதற்கான சக்தி அந்த இயக்கங்களுக்குக் கிடையாது. ஆனால், எப்போதும் பதற்றத்தைத் தக்கவைக்க முடியும். எப்போதும் யுத்தம் செய்ய முடியும். எப்போதும் அவசரநிலையிலேயேதான் இருந்தாக வேண்டும்.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில், பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற ஆட்சி அதிகார அமைப்பின் ஏற்பாடு எத்தனை அபத்தமானது! யாசிர் அராஃபத் எதற்காகப் போராடி அந்தச் சிறு பிராந்தியத்துக்குத் தன்னாட்சி உரிமைகளைக் கேட்டுப்பெற வேண்டும்? எதற்காக அவருக்கு நோபல் பரிசு தந்திருக்க வேண்டும்?

மூன்று விஷயங்கள் நினைவில் இருந்தால் போதும்.

இஸ்ரேல் என்கிற தேசமே இல்லாது போகும்வரை போராட்டம் நிற்காது என்கிற இயக்கங்களின் வீர சபதத்துக்கு உயிர் இருக்கும்வரை, பாலஸ்தீனுக்கான யுத்தம் என்பது முடிவற்றது, தீர்வுகளற்றது.

இஸ்ரேல் எந்த நேரத்திலும் பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற ஆட்சி அமைப்பை செல்லாததாக அறிவிக்கலாம். தேர்தல் ஜனநாயகத்தைத் தடை செய்து, மேற்குக் கரை, காஸா பகுதிகளை மீண்டும் ஆக்கிரமித்துக் கொள்ளலாம். அப்போது தட்டிக்கேட்கக் கூட மத்தியக் கிழக்கில் வேறு யாரும் இருக்கமாட்டார்கள். அந்நிலப்பரப்பு முழுவதுமே கிட்டத்தட்ட அமெரிக்க சொல்பேச்சைக் கேட்டு நடக்கிற பிராந்தியமாகியிருக்கும். இன்னும் சில மாதங்கள் அல்லது அதிகபட்சம் ஒரு வருடத்துக்குள் வரப்போகிற இரானுடனான அமெரிக்காவின் யுத்தம், இதற்கு ஒரு தொடக்கப் புள்ளியாக இருக்கும்.

பிரதமர் ஹனியா மீண்டும் பாலைவனப் பகுதிகளிலும் பக்கத்து தேசங்களின் எல்லைகளிலும் பதுங்கி இருந்து ஆயுதமேந்தலாம்.

உலகிலேயே வேறு எந்தப் பிராந்தியத்திலும் இப்படி ஒரு சூழ்நிலை கிடையாது. சபிக்கப்பட்ட பிரதேசமாகிவிட்ட பாலஸ்தீனில், ஹமாஸ் இன்று ஜனநாயக வேஷம் தரித்து மேடையேறியிருக்கிறது. தனது இயல்புக்குச் சற்றும் பொருந்தாத வேஷம் அது. கூடியவரை அமைதி, கூடியவரை நல்லெண்ணம் என்றுதான் செயல்படப் பார்க்கிறார்கள். ஆனால், இஸ்ரேலின் செயல்பாடுகள் அவர்களை நீண்ட நாளைக்கு அமைதிப்பாதையில் இருக்கவிடும் என்று தோன்றவில்லை.

ஹமாஸ் பதவியேற்ற பிறகு, காஸாவில் இஸ்ரேல் நிகழ்த்திய அத்துமீறல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. சீண்டுவதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் ஆத்மசுத்தியுடன் அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

கடந்த ஜூன் மாதம் தொடங்கி, தோராயமாகப் பதினைந்து நாள்களுக்கு ஒரு முறையாவது, இஸ்ரேல் ராணுவம் காஸாவில் ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தாக்குதலில் ஈடுபடுகிறது. ஹமாஸ் போராளிகள், தங்கள் வழக்கமான பாணியில் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பாலஸ்தீனின் ஆளும் கட்சியாகவும் இப்போது ஹமாஸ் இருக்கிறபடியால், இதனை வழக்கமான தாக்குதல்-பதில் தாக்குதல் என்று எடுத்துக்கொள்ளமுடியாது. பாலஸ்தீன் அத்தாரிடியை ஒரு தீவிரவாத மையமாக சர்வதேச அரங்கில் முன்னிறுத்தும் பணியை. இஸ்ரேல் ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

இஸ்ரேல் புரிவதும் தீவிரவாதம்தானே என்று யாரும் கேட்பதில்லை. அதுதான் இங்கே பிரச்னை. தனது ஒவ்வொரு செயலுக்கும் அமெரிக்க அதிபரின் ஆசிர்வாதத்தை வாங்கிக்கொண்டு. அத்தேசம் இறங்குகிறபடியால் எதிர்த்துக் கேட்க யாரும் முன்வருவதில்லை.

ஆம். அமெரிக்கா என்பது ஹமாஸைக் காட்டிலும், இஸ்ரேல் அரசைக் காட்டிலும் மிகப்பெரிய தீவிரவாத தாதா அல்லவா?